# கரூர் மாநகராட்சி
# மாமன்ற கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2022ம் ஆண்டு ஜனவரி 03ம் நாள் திங்கள்கிழமை மாலை 5.30 மணிக்கு கரூர் மாநகராட்சியின் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திரு.ந.ரவிச்சந்திரன் அவர்கள் தலைமையில் மாமன்றக் கூட்டத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

## <u>மாமன்றப் பொருள்கள்</u>

1)கரூர் மாநகரில் மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் 2021–2022ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண் 5–ல் அரசு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தொடங்கிட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி அரசு வேளாண்மை கல்லூரிக்கு நிரந்தர இடம் மற்றும் கட்டடம் கட்டும் வரை கல்வி சேவை அடிப்படையில் அரசு வேளாண்மை கல்லூரி, பிரம்ம தீர்த்தம் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு பயன்பாட்டு மைய (Multi Utility Hall) கட்டிடத்தில் தற்காலிகமாக இயக்க அனுமதி கோரி பதிவாளர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகம் கோயமுத்தூர் அவர்களின் கடித எண் E1/Estt of Agri College & Res Institute Karur / 2021 Dt.,12.10.2021 கடிதத்தின் வாயிலாக கோரப்பட்டது. அதன்படி மாவட்ட ஆட்சியர் கரூர் அவர்களின் கடிதம் ந.க.எண் ஆர்268/2021 நாள் 12.10.2021–ன் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் கரூர் மாநகரில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகம் 2021–22 ஆம் கல்வி ஆண்டில் கல்லூரி செயல்பட உள்ளதாலும், கல்லூரி செயல்பட தற்காலிமாக ஒதுக்கப்படும் கட்டிடத்தில் கல்லூரி செயல்பட ஏதுவாக நிர்வாக அலுவலகம், வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள் அமைப்பதற்கு ஏதுவாக மாற்றங்கள் செய்யப்பட வேண்டியுள்ளதாலும், அதற்கான கால அவகாசம் குறைவாக உள்ளதாலும், கரூர் மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட பல்நோக்கு பயன்பாட்டு மைய (Muliti Utility Hall) கட்டிடத்தினை வேளாண்மை கல்லூரிக்கு நிரந்தர இடம் மற்றும் கட்டிடம் கட்டப்படும் வரை தற்காலிகமாக, கல்வி சேவை அடிப்படையில் (On Education Service Basis) அரசு வேளாண்மை கல்லூரி இயக்க அனுமதி வழங்க கோரியுள்ளார்.

அதன்படி பொதுபணித்துறையினால் நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை ரூ.5,47,770/– செலுத்த இவ்வலுவலக ந.க.எண் அ6/9730/2021/ நாள் 27.10.2021–ன்படி பதிவாளர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகம் கோயமுத்தூர் அவர்களிடம் இசைவு கோரப்பட்டது. பதிவாளர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகம் கோயமுத்தூர் அவர்களின் கடித எண் R2/14802 / 2021 Dt 17.12.2021 கடிதத்தில் கல்வி சேவை அடிப்படையில் (On Education Service Basis) இயங்க உள்ளதால் குறைந்த வாடகையாக ரூ.5,000/– நிர்ணயம் செய்து தர கோரியுள்ளார்.

எனவே மேற்படி கட்டிடத்தினை கல்வி சேவை அடிப்படையில் வழங்குவதற்கு குறைந்தபட்ச வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அ) மேற்படி பிரம்மதீர்த்தம் சாலையில் 2014–2015 தன்னிறைவு திட்டத்தின்கீழ் (பொது மக்கள் பங்களிப்பு ரூ.1.16 கோடி மற்றும் அரசு மான்யம் ரூ.2.34 கோடி) ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு பயன்பாட்டு மையம் (Multi Utility Hall) கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. கல்வி சேவை அடிப்படையில் தமிழ்நாடு அரசு வேளாண்மை கல்லூரி அமைக்கப்பட இருப்பதாலும், மாநகரின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு மேற்படி கட்டிடத்திற்கு தற்காலிகமாக மாதாந்திர வாடகையாக ரூ.25,000/– (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) நிர்ணயம் செய்யலாம்.

ஆ) மேற்படி கட்டித்தினை 1 1/2 ஆண்டுகள் அல்லது கட்டிடம் கட்டி முடிக்கும் வரை வேளாண்மை கல்லூரி தற்காலிகமாக செயல்பட அனுமதி கோரியுள்ளதால், ஒப்படைக்கும் நாள் முதல் 1 1/2 ஆண்டுகள் அல்லது அதிகபட்சமாக 3 ஆண்டுகளில் திரும்ப ஒப்படைக்க வேண்டும், எனவும் வாடகை காலத்திற்கான மின் கட்டணம், மற்றும் இதர பராமரிப்பு செலவினங்களை மேற்படி கல்லூரி நிறுவனமே ஏற்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் மாமன்றம்அனுமதி வழங்கலாம்.

(அ6/9730/2021)

**தீர்மான எண்.1** அனுமதிக்கப்பட்டது

2)கரூர் மாநகராட்சியில் அரசாணை எண்.G.O.M.S.No.99 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை 08.10.2018ல் உட்கட்டமைப்பு (ம) அடிப்படை வசதிகள் மேம்பாட்டு திட்டம் 2018–2019ல் (Infrastructure and Basic Amenties fund) ல் ரூ.18.00கோடி மதிப்பீட்டில் ரயில் நிலையம் முதல் தேசிய நெடுஞ்சாலை வரை 40அடி இணைப்பு சாலை அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில், தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செய்லமுறை உத்திரவு ந.க.எண்.18281/2016/டிஓ1, நாள்.16.11.2018ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 27.01.2019ம் தேதியன்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் M/S.KPD Contractors, Karur அவர்களது குறைவான ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு 04.02.2019ல் ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது.

இப்பணிக்கு அசல் மதிப்பீட்டில் கரூர் ரயில் நிலையத்திலிருந்து புகளூர் சாலை மேம்பாலம் வழியாக NH7 வரை இணைப்பு சாலை அமைக்க வழிவகை செய்யப்பட்ட நிலையில் CH : 0.00 முதல் CH:525.00 வரை உள்ள சாலை அமைப்பதற்கான இடம் கரூர் ரயில் நிலையத்திற்கு சொந்தமான 'A' Class பிரிவில் உள்ளதால் இரயில்வே துறையின் வருங்கால விரிவாக்க பணிக்கு தேவைப்படுவதாலும், சாலை அமைக்கும் பணிக்கு இடத்தினை வழங்க முடியாது என இரயில்வே துறையினரால் தெரிவிக்கப்பட்டதால் CH:0.00 முதல் CH:525.00 வரை உள்ள சாலை அமைப்பதற்கு மாற்றாக கரூர் ரயில் நிலையத்திலிருந்து ரத்தினம் சாலை வழியாக புகளூர் சாலை மேம்பாலம் வரை ஏற்கனவே அமைக்கப்பட்ட சாலை நல்ல நிலையில் உள்ளதால் கரூர் இரயில்வே நிலையத்திற்கு பதிலாக புகளூர் சாலை மேம்பாலம் பகுதி CH:525.00 லிருந்து பணிகளை மேற்கொள்ளவும், அசல் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள கரூர் ரயில் நிலையம் முதல் புகளூர் மேம்பாலம் வரை அமைக்கப்பட வேண்டிய சாலை பணிக்கு பதிலாக, பெரிய குளத்துப் பாளையம் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் எளிதில் குளத்துப்பாளையம் குகை வழிப்பாதை (Sub way)யிலிருந்து புதியதாக அமைக்கப்பட்டு வரும் இணைப்பு சாலையில் அணுகும் வகையிலும், வார்டு எண். 4 மற்றும் 5 பகுதிகளிலுள்ள பெரியார் நகர், வையாபுரிநகர், கே.வி.பிநகர் மற்றும் செங்குந்தபுரம் பகுதி பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பெரியார் நகரிலிருந்து குளத்துப்பாளையம் குகைவழிப்பாதை வரை அணுகுசாலை மற்றும் ஓடையின் இருபுறமும் கம்பியுடன் கூடிய தடுப்புச்சுவர் மற்றும் வடிகால் அமைக்கும் பணி RCC Counter fort Retaining Wall, RCC Toe wall அமைக்கும் பணிகள் ஆகிய அசல் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத பணிகளை மதிப்பீட்டுத் தொகை ரூ.1800.00 இலட்சத்திற்கு மிகாமல் மேற்கொள்ள Work slip தயார் செய்து நகர்மன்ற அவசர கூட்ட தீர்மான எண்.2587, நாள்.11.12.2020 அனுமதிக்கப்பட்டதின் பேரில் தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் 29.12.2020ல் ஒப்புதல் பெறப்பட்டு தொடர்ந்து பணிகள்மேற்கொள்ளப்பட்டது.

**அட்டவணை–I**

| Sl.No | Scope of Work | As Per Approved Length | Work Done | As Per Execution | Remarks |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | Formation of BT Road | 2600 m | BT Road | 1229.70 m | - |
| | | | Wetmix Road | 1286.80 m | - |
| 2 | RCC Drain | 2200 m | Cover Slab Drain | 1708.7 m | - |
| | | | Open Drain | 290.9 m | - |
| 3 | RCC Toe Wall | 2174 m | - | 1693.50 m | - |
| 4 | RCC Counterfort Retaining Wall | 275 m | - | 270.5 m | - |
| 5 | RCC Culvert | 15 Nos | - | 11 Nos | - |
| 6 | Street Light LED | 85 Nos | - | 31Nos | - |

மேற்கண்ட அட்டவணையில் கலம் எண்.3ல் கண்டவாறு ஒப்புதல் வழங்கப்பட்ட பணிகளுக்கு கலம் எண்.4ல் கண்டவாறு பணிகள் ஒப்பந்ததாரரால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இச்சாலை பணியில் அட்டவணை–2ல் கண்டுள்ள 3 இடங்களில் நிலம் கையகப்படுத்தாத நிலையில் உள்ளதால் தொடர்ந்து தார் சாலை பணிகள் மேற்கொள்ள இயலாதநிலை உள்ளது.

<u>அட்டவணை–II</u>

| Survey No | 3Chainage | Length (M) |
|---|---|---|
| | Ch - 1004.00 to 1008.00 | 4.00 |
| | Ch -1370.00 to 1546.00 | 176.00 |
| | Ch - 1696.00 to 1772.00 | 76.00 |

இச்சாலையின் மொத்த நீளம் 2600மீட்டர் நீளத்தில் 1230 நீளத்திற்கு தார் சாலை அமைக்கப் பட்டுள்ளது. நீளத்திற்கு Wet Mix Macadam அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அட்டவணை–II–ல் குறிப்பிட்டுள்ள மூன்று இடங்களில் நிலம் கையப்படுத்தினால் மட்டுமே சாலை பணியினை முழுமையாக முடிக்க முடியும்.

இந்நிலையில் ஒப்பந்ததாரர் M/S.KPD Contractors, Karur அவர்கள் தனது 09.07.2021 நாளிட்ட கடிதத்தில் நிலம் கையப்படுத்துவதில் காலதாமதம் எற்படுவதாலும் மற்றும் கட்டுமான பொருட்களின் கடுமையான விலையேற்றம் மற்றும் கட்டுமான தொழிலாளர்களின் சம்பள உயர்வு ஆகிய காரணங்களால் தொடர்ந்து இப்பணிகளை மேற்கொள்ள இயலாத சூழ்நிலை உள்ளதால், தற்போது வரை மேற்கொள்ளப்பட்ட பணிகளை கணக்கிட்டு இறுதிப் பட்டியல் வழங்குமாறு கோரியுள்ளார்.

இப்பணி திட்டப்பணி என்பதாலும், பணியினை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியிருப்பதாலும், ஏற்கனவே பணி உத்திரவு வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் மேற்கொண்டு பணிகள் செய்ய இயலாதநிலையில் உள்ளதால், செய்து முடிக்கப்பட்டுள்ள பணிகளுக்குரிய இறுதிப் பட்டியல் வழங்க கோரியுள்ளதாலும், மேற்கண்ட பணிக்கான பணி உத்திரவை மாமன்ற தீர்மான எண்.71, நாள்.30.11.2021ல் ரத்து செய்யப்பட்டுள்ளது.

எனவே இப்பணிக்கான இறுதிப் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கவும், மீதமுள்ள பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் தரப்படுத்தப்பட்ட செந்தாரப் பட்டியல் 2018–2019 ஆம் ஆண்டிற்கான விலை விகிதத்தில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.95 கோடிக்கு அனுமதியும், மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தில் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/7170/2021)

**தீர்மான எண்.2 அனுமதிக்கப்பட்டது**

3)கரூர் மாநகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021 – 2022 (**KNMT**)ஆம் ஆண்டின் கீழ்மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும்வண்ணம் 17.12.2021ம் தேதி அன்று மாநில அளவில் Vipras ADZ ன் நிறுவனம் மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ.57,383/–ஐ Vipras ADZ, சென்னைஅவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1 மாமன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்காணும் செலவினத் தொகை ரூ.57,383/– வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/1245/2021)

**தீர்மான எண்.3 அனுமதிக்கப்பட்டது**

4)கரூர் நகர காவல் நிலையம், வெங்கமேடு காவல் நிலையம், பசுபதிபாளையம் காவல் நிலையம் ஆகிய பகுதிகளில் உரிமம் கோரப்படாதவர்களின் வாகனமும் மற்றும் விதி எண்.102 கிரிமினல் குற்றம் சார்ந்த வழக்குகளுக்குஉட்பட்ட 167 இரு சக்கர வாகனங்கள், 1 மூன்று சக்கர வாகனங்கள், 4 நான்கு சக்கர வாகனங்கள் என்று மொத்தம் 174 இந்த வாகனங்களுக்கு உரிய உரிமைதாரர்கள் அந்தந்த காவல் ஆய்வாளர் நிலையங்களில் சென்று தகுந்த ஆவணங்களை காண்பித்து பெற்றுக் கொள்ளும் அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 25.12.2021 ம் தேதி அன்று தஞ்சை மாலைமுரசு மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம்

ரூ.5906/–ஐ தஞ்சை முரசு பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்காணும் செலவினத் தொகை ரூ.5906/– வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மான்றம் அனுமதிக்கலாம். (இ1/11600/2021)

**தீர்மான எண்.4 அனுமதிக்கப்பட்டது**

5)கரூர் மாநகராட்சியில் அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு (**Infrastructure and Amenities fund)** 2020–2021ஆம் ஆண்டின்கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 02.12.2021ம் தேதி அன்று தினகரன் நாளிதழ் மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ.8453/–ஐ Vipras ADZ, சென்னை அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்காணும் செலவினத் தொகை ரூ.8453/– வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/1245/2021)

**தீர்மான எண்.5 அனுமதிக்கப்பட்டது**

6)கரூர் மாநகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021–2022 (**KNMT**)ஆம் ஆண்டின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 30.11.2021 ம் தேதி அன்று மாநில அளவில் Vipras ADZ ன் நிறுவனம் மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ.1,95,090/–ஐ Vipras ADZ, சென்னை அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்காணும் செலவினத் தொகை ரூ.195090/– வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/1245/2021)

**தீர்மான எண்.6 அனுமதிக்கப்பட்டது**

7)கரூர் மாநகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை அபிவிருத்தி திட்டம் – 2021–2022 (**Turip)** 2021–2022ஆம் ஆண்டின் கீழ்மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 01.12.2021ம் தேதி அன்று மாநில அளவில் Vipras ADZன் நிறுவனம் மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ.53340/–ஐ Vipras ADZ,சென்னை அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1 மாமன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்காணும் செலவினத் தொகை ரூ.53340/– வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/1245/2021)

**தீர்மான எண்.7 அனுமதிக்கப்பட்டது**

தனி அலுவலர்
கரூர் மாநகராட்சி